வாக்குமூலம்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
சி.சி.எண்.210/21
வழக்கு சாட்சி – அ.சா.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அருண்ராஜா | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 02.05.23

**( எதிரி ஆஜர். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தேனியில் குடியிருந்து வருகிறேன். நான் மில்லில் வேலை செய்துவருகிறேன். எதிரியை தெரியும். அவரை மருத்துவமனையில் வைத்து பார்த்தேன். 17.9.21ம் தேதி நானும்அருண்குமார் என்பவரும் இருசக்கரவாகனத்தில் அன்னஞ்சி விலக்கிலிருந்து தேனிக்கு சென்றுக்கொண்டிருந்தோம். மாலை 6 மணி முதல் 7 மணி இருக்கும். நாங்கள் இருசக்கரவாகனத்தில் முன்னால் சென்றுக்கொண்டிருந்த போது எங்களுக்கு பின்னால் எதிரி இருசக்கரவாகனத்தில் வந்துக்கொண்டிருந்தார். அன்னஞ்சி பைபாஸில் ஸ்மைலி ஸ்போர்ட்ஸ் கிளப் அருகே ரோட்டை கடப்பதற்காக முருகேசன் என்பவர் நின்றுக்கொண்டிருந்தார். அவர் மீது எதிரி இடித்துவிட்டார். நாங்கள் வண்டியை நிறுத்தி முருகேசனை பார்த்த போது அவருக்கு கையில் அடிபட்டிருந்தது. அவரது பாக்கெட்டிலிருந்து ஆதார்கார்டு செல்போனை எடுத்து பார்த்தோம். அவர் கடைசியாக பேசிய செல்போன் எண்ணிற்கு போன் பண்ணி கேட்டபோது அவர் மகள் பிரதீபா என்று கூறினார். அவருக்கு விபத்து நடந்த விபரத்தை கூறி விட்டு ஆம்புலன்ஸில் தேனி கவிலக்கு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்கு சேர்த்த போது அங்கு அவரை பரிசோதித்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். அதற்குள் அவரது மகளும் அவரது பாட்டியும் மருத்துவமனை வந்து எங்களிடம் விசாரித்தார்கள். அவர்களிடம் விபரத்தை கூறிவிட்டு வந்துவிட்டோம். மறுநாள் விபத்து சம்மந்தமாக அல்லிநகரம் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.